* 310 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that Jail Labour was utilised to run the Cattle Colony and fodder farm at Madhavaram Milk Project in the place of casual labourers during the strike staged by the workers of the above project in the month of July 1970; and

(b) if so, whether any remuneration has been paid to this Jail Labour?

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாதவரம் பால் பண்ணைத் திட்டத் தொழிலாளர்கள் 1970 ஜூலைத் திங்களில் நடத்திய வேலை நிறுத்தத்தின்போது, கால்நடைப் பண்ணை, தீவனப் பண்ணையில் தினக் கூலித் தொழிலாளர்களை வைத்து நடத்துவதற்குப் பதிலாக, சிறைத் தொழிலாளர்கள் வைத்து நடத்தப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், சிறைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சிறைச்சாலைத் துறைக்கு ரூ. 6,251.81 செலுத்தப்பட்டது.

Grant to the Ex-servicemen in Thanjavur district

* 311 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the total grant sanctioned to the Ex-servicemen living in Thanjavur district during the year 1970–71 from the various amelioration funds of the State; and

(b) the number of Ex-servicemen and the amount disbursed to them in this district during the period?

1972 நவம்பர் 14]

தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு மானியம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970–71-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் வாழும் முன்னாள் படை வீரர்களுக்கு இம்மாநிலத்தின் பல்வேறு நல நிதிகளிலிருந்து ஒதுக்கப் பட்ட மொத்த மானியம் எவ்வளவு?

(இ) மேற்குறிப்பிட்ட காலத்தில் இம்மாவட்டங்களில் மானியம் அளிக்கப் பெற்ற முன்னாள் படை வீரர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு அளிக்கப் பெற்ற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ரூ. 1,30,334.30.

(இ) முன்னாள் படை வீரரின் எண்ணிக்கை 309.

வழங்கப்பட்ட தொகை ரூ. 1,06,499.65.

Duties of Temple Trustees

* 312 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of **THAVATHIRU** KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the duties of Temple Trustees?

அறங்காவலர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருக்கோயில் அறங்காவலர்கள் ஆற்றவேண்டிய பணிகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Renovation work of Srivilliputtur Andal Temple

* 313 *Q.*—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the renovation work of Srivilliputtur Andal Temple has commenced; and

(*b*) the names of the members of renovation Committee?

@ 121–123-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.